# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தீங்கட்கிழமை 01.11.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# நாட்டின் நீதியை மதிக்காதவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவது இலங்கைக்குப் புதிய விடயமல்ல

## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு



பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாக தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருகின்ற ஒருவரை பல்லின மக்களுக்கான சட்டத்தினை நிர்ணயிக்கப் பொறுப்பளிப்பது திருடன் கையில் பொலிஸ் உத்தியோகத்தைக் கொடுப்பதற்கே ஒப்பானதாகும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

கொலைக் குற்றவாளிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படுவதும். அவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்படுவதும், நாட்டின் நீதியை மதிக்காதவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவதும் இலங்கைக்குப் புதிய விடயமல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



சிரேஸ்ட பேராசிரியர் புஷ்பரத்தினம் அவர்களால் திருகோணமலை கோமரங்கடவ ( குமரன் கடவை) நேற்று கண்டு பிடிக்கப்பட்ட சோழர் கால கல்வெட்டு .

# செவ்வாய்க்கிழமை மாபெரும் போராட்டம்

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோர், ஆளுநர் அலுவலக முன்றலில், செவ்வாய்க்கிழமை மாபெரும் கண்டப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பிரபாகரன் கருத்து தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் எனவும் அரசாங்கத்தால் உர இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கான தீவனம் பெறுவதில் இடர்பாடு காணப்படுவதனால், விவசாயிகள் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள்

02 ஆம் பக்கத்தில்...

# திருமலையில் 273 இளைஞர், யுவதிகளுக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைப்பு



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கமைய ஒரு இலட்சம் அரச வேலைவாய்ப்பு வழங்கும் விஷேட வேலை திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாம் கட்ட தொழில் பெருநர்களாக

02 ஆம் பக்கத்தில்...

# மக்களை கோலை செய்தமைக்கான காரணத்தை அறிந்துகோள்ள வேண்டும்

(காந்தன்)



உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலில் நிரபராதிகளான மக்களை கொலை செய்தமைக்கான காரணத்தை அறிந்துகொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நிரபராதிகளான மக்களை கொலை செய்தமைக்கான காரணத்தை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இது எமக்கு வழங்கும் பரிசல்ல. இதனை தெரிந்துகொள்ள வேண்டியது எமது உரிமை என்பதை நாஙக்ள மீண்டும் நினைவூட்ட விரும்புகிறோம்.

இதனால், தயவு செய்து ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இருக்கும் உண்மையான கதையை வெளியிடுங்கள் என்றே நாம்

02 ஆம் பக்கத்தில்...

# மாமனார், மாமியாரை கோடாரியால் வெட்டிய மருமகன்: ஓட்டமாவடியில் கோரச் சம்பவம்!

( எச்.எம்.எம்.பர்ஸான்)

மாமனாரையும், மாமியாரையும் மருமகன் ஒருவர் கோடாரியால் வெட்டிய சம்பவமொன்று சனிக்கிழமை (30) இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - மீராவோடை பகுதியிலே இக் கோரச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

கணவன், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக மனைவியை விட்டு பிரிந்திருந்த கணவன் ஒருவரே வீடு புகுந்து மனைவியின் தந்தைக்கும், தாய்க்கும் இவ்வாறு கோடரியால் வெட்டியுள்ளதாக பொலிஸாரின்

02 ஆம் பக்கத்தில்...

# மக்களின் காணிகளை வனபரிபாலன திணைக்களம் எல்லைக் கற்கள் போட்டுவதை ஏற்றுக்கோள்ள முடியாது

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



(ரக்ஸனா)

மக்களின் வாழ்வாதார குடியிருப்பு காணிகளை வனபரிபாலனத் திணைக்களம், எல்லைக் கற்களை போட்டு தன்னக படுத்துவதற்கு முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுளை வீதியில் பெரிய புல்லுமலை தொடக்கம் கொடுவாமடு வரை உள்ள மக்களுக்கு சொந்தமான நிலப்பகுதிகள் வனபரிபாலனத் திணைக்களத்தினர், எல்லைக் கற்களை போடும் வேலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்பிரச்சினை தொடர்பில்

02 ஆம் பக்கத்தில்...






# மூதாட்டியின் வீடு வளவு பயிர்கள் காட்டு யானையால் சேதம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலையை அண்டி அமைந்துள்ள ஆண்டான் குளம் கிராமத்திற்குள் உள் நுழைந்த காட்டு யானையால் தனது வீடு சேனைப்பயிர்கள் வேலிகள் என்பன சேதமாக்கப்பட்டிருப்பதாகவும்

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கையில் மீண்டுமோரு இனப்படுகோலை நடக்காதிருக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழிவகுக்கும்

(ஜுட்)



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இடவில்லை என்றபோதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பாக பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின்

02 ஆம் பக்கத்தில்...






# தமிழர் பகுதிகளை அபகரிக்கின்ற நிலைமைகள் எமது எதிர்காலத்தையே கேள்விக் குறிக்குள்ளாகியுள்ளது

கிழக்கில் தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றுவதற்கு பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த தமிழ் இளைஞர்கள் ஒன்றிணைந்து குரல்கொடுக்க முன்வர வேண்டும் என வாலிப முன்னணியின் வடக்கு, கிழக்கு மாகாணதலைவர்கி.சேயோன் தெரிவித்துள்ளார்.

வேரத்தடி என்னும் பகுதியில் நடைபெற்ற

02 ஆம் பக்கத்தில்...







## தமிழர் பகுதிகளை அபகரிக்கின்ற நிலைமை

தொல்பொருள் செயலணியின் நடவடிக்கைகள் குறித்து இன்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், மட்டக்களப்பு, வந்தாறுமூலை உப்போடை வீதியில் வேரத்தடி எனும் இடத்தில் தொல்பொருள் இடம் எனவும் அதற்குக் கல் நடவேண்டும் எனவும் திணைக்களத்திலிருந்து வந்தவர்கள் மக்களின் எதிர்ப்பு காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழர் பகுதிகளை அபகரிக்கின்ற நிலைமைகள் எமது எதிர்காலத்தையே தற்பொழுது கேள்விக்குறிக்குள்ளாகியுள்ளது. அதைச்செய்வோம், இதைச்செய்வோம் என ஆட்சி பீடம் ஏறிய இந்த இனவாத அரசு தற்பொழுது சாதாரண ஆட்சியைக் கூட நடத்த முடியாமல் பலவீனமடைந்த நிலையில் தமது வங்குறோத்து அரசியலுக்காக மீண்டும் இன முறுகலை ஏற்படுத்தி விரிசலை ஏற்படுத்தி மீண்டும் அரசியல் லாபமீட்ட முற்படுவதானது மிகவும் கேவலமான அரசியல் நிலைமையாகும்.

இதில் என்ன வேடிக்கை என்றால், இந்த அரசை ஒத்து ஊதுகின்ற ஊதுகுழல்கள். கிழக்கை மீட்போம் எனப் போலியாக மக்களை ஏமாற்றி வாக்கினைப் பெற்று தங்களது. பதவிகளைப் பாதுகாப்பதற்காக அமைதியாக இருக்கின்றார்கள் . இவர்களால் எந்த நன்மையும் தமிழ் மக்களுக்கு இல்லை.

இதை மக்களும் இன்று நன்கு உணர்ந்திருக்கின்றார்கள் . உண்மையில் தமிழ் மக்களையும் தமிழர் நிலத்தையும் நேசிப்பவர்களாக இருந்தால் தெற்கிலிருந்து வருகின்ற அமைச்சர்களை ஊர் ஊராக அழைத்து ஆடு வெட்டி விருந்து வைப்பதை விட்டுவிட்டு.தமிழர் நிலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முடியுமா எனக் கேள்வி எழுப்புகின்றேன்.

இப்பொழுது மாவட்டத்தில், ஏன் கிழக்கு வடக்கில் பாரிய இனப்பரம்பலை மாற்றுவதற்கான பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. அதற்கு நல்ல உதாரணம் கோரகல்லி மடுவில் வைத்து சிங்கள மக்களுக்கான காணி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை ஆகும். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்புகளும் தொல்பொருள் செயலணியென்னும் பெயரில் சிங்கள மயமாக்கல் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான செயற்பாடுகளைத் தமிழ் இளைஞர்கள் ஜனநாயக ரீதியான எதிர்ப்புகளைத் தெரிவித்துத் தடுத்து நிறுத்துவதற்குக் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைய வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மூதாட்டியின் வீடு வளவு பயிர்கள் காட்டு

தான் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் 60 வயதான மூதாட்டி தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை இரவு கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானை ஆண்டான்குளம் கிராமத்தைச் சேர்ந்த செல்லன் கண்ணகை 13 வயதான பேத்தியுடன் நித்திரையில் இருக்கும்போது காட்டு யானைகளின் நடமாட்டம் உணரப்பட்டதால் உடனடியாக தான் தனது பேத்தியையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குள் ஓடி ஒழிந்து கொண்டு தப்பி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தெய்வாதீனமாக தானும் தனது பேத்தியும் காட்டு யானைத் தாக்குதலில் இருந்து ஓடித் தப்பிவிட்ட போதிலும் பொழுது விடிந்து தனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீடும் வளவுக்குள் நாட்டப்பட்டிருந்த சேனைப் பயிர்களும் வேலிகளும் சேதமாக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் காட்டு யானைகளின் ஊடுருவலும் சேதம் விளைவிக்கும் சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## மாமனார், மாமியாரை கோடாரியால் வெட்டிய

விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மருமகனின் தாக்குதலுக்குள்ளான 62 வயதுடைய மாமனார் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மாமியார் தொடர்ந்தும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இக் கோரத் தாக்குதலை மேற்கொண்ட நபரை கைது செய்ய வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்களை கொலை செய்தமைக்கான காரணத்தை

மீண்டும், மீண்டும் நாட்டின் தலைவர்களிடம் கோரிக்கை முன்வைக்கின்றோம்.

இது நாட்டின் தலைவர்களுடன் மோதல்களை ஏற்படுத்திக்கொள்ளும் போராட்டம் அல்ல என்பதையே நாம் எப்போதும் கூறி வந்துள்ளோம். நீதி நிலைநாட்டப்படுவதை காண வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

அதிகளவில் பணத்தை மற்றும் அழிந்தவற்றை நிர்மாணிப்பதில் தருமாறு நாங்கள் கோரவில்லை. நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு எனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் தேவை என வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாக மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையில் 273 இளைஞர், யுவதிகளுக்கு

273 பேருக்கு அரச தொழில்வாய்ப்பு நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரள அவர்களின் தலைமையில் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கபில நுவன் அத்துகோரள திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற மாவட்ட உறுப்பினர் எம். எஸ்.தௌபீக் அவர்களினால் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வழங்கிவைக்கப்பட்டது

இதன்போது திருகோணமலை, குச்சவெளி, கிண்ணியா, மூதுர்,மொரவெவ,கோமடங்கடவல,பதவி ஸ்ரீ புர பிரதே ச செயலாளர் பிரிவுகளில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் 273 பேருக்கே இந்நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று 273 நியமன கடிதங்கள் பெறுநர்களில் கந்தளாய் நகர சபை மண்டபத்தில் கந்தளாய்,சேருவல மற்றும் வெருகல் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை சேர்ந்த 81 பேருக்கும் இந்நியமனங்கள் கந்தளாய் நகர மண்டபத்தில் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்,மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள,அரசியல் பிரமுகர்கள்,பிரதேச செயலாளர்கள் மற்றும் நியமனதாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செவ்வாய்க்கிழமை மாபெரும் போராட்டம்

பெரும் இடரை எதிர்நோக்கி வருகின்றார்கள் எனவும் கூறினார்.

இந்நிலையில், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நீதி கோரி, நாளை செவ்வாய்க்கிழமை, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால், கண்டன போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

'வலிகாமம் வடக்கு பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் முதல் கட்ட நிதி மட்டுமேபயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலதிகமான நிதி வசதிகள் இன்று வரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, ஆனால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து, கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அத்துடன், யாழ். மாவட்டச் செயலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் ஆகியோரிடம் மகஜரும் கையளிக்கவுள்ளனர்' எனவும், அவர் கூறினார்.

## இலங்கையில் மீண்டுமொரு இனப்படுகொலை நடக்காதிருக்க சர்வதேச

சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றது இனப்படுகொலை தான் என்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை இயற்றியுள்ளது.இந்த இனப்படுகொலை தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எல்லா தமிழ் கட்சிகளுமே கடந்த காலத்தில் வலியுறுத்தி வந்துள்ளன.அத்துடன், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்றும் எல்லா தமிழ் தேசிய கட்சிகளும் கூட்டாக கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டு ஐ.நா.வுக்கு அனுப்பியுள்ளன.

ஆகவே, இந்த பின்னணியில், Global Rights Compliance செய்திருக்கும் இந்த நடவடிக்கை மிகவும் சரியானதும் அத்தியாவசியமானதும் காலத்துக்கு பொருத்தமானதும் ஆகும் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது விசாரணை நடைபெறுமா என்பது தொடர்பில் இப்பொழுது எந்த எதிர்வு கூறலையும் செய்ய முடியாது. ஆனால், சர்வதேச நீதிமன்றம் இந்த ஆவணத்தை பரிசீலித்து எடுக்கவிருக்கும் முடிவிலேயே அது தங்கி இருக்கின்றது.

சட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் மீண்டும் ஒரு இனப்படுகொலை இலங்கையிலோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலுமோ நடக்கக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அவசியமாக செய்யப்பட வேண்டிய ஒரு விடயத்தை நல்ல முறையில் Global Rights Compliance செய்திருக்கின்றது.பாதிக்கப்பட்ட 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றத்திடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

ஆகவே, இந்த ஆவண சமர்ப்பணம் வலுவானதாக செய்யப்பட்டிருப்பதாகவே நான் உணர்கின்றேன்.மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் இந்தக் கால கட்டத்தில் அவசியமாகின்றன. இங்கு எமது வட கிழக்கு நிலங்கள் பறிபோகின்றன. பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த வணக்கஸ்தலங்கள் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படுகின்றன.

தொல்பொருளியலை திரிபுபடுத்தி தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களை சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களாக எடுத்துக் காட்டி பல ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களமும் வேறு காரணங்களை முன் வைத்து மற்றும் அரசாங்க திணைக்களங்கள் பலவும் எமது காணிகளை கையேற்று வருகின்றன.

அங்கு வாழும் தமிழ் மக்கள் இராணுவ ஒத்துழைப்புடன் விரட்டி அடிக்கப்படுகின்றனர்.சிங்கள குடியேற்றம் தமிழர் தாயகத்தில் துரிதமாக நடைபெறுகின்றன.

இனப்படுகொலையின் பல்வேறு பரிமாணங்கள் இவை. இவ்வாறான விசாரணைகளின் போது தற்போது இங்கு நடைபெறும் விடயங்களும் உண்மையை உலகம் உணர உதவி புரியும்.நான் இந்த நடவடிக்கையை முற்றும் வரவேற்கின்றேன் என்று விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களின் காணிகளை வனபரிபாலன திணைக்களம் எல்லைக் கற்கள்

உண்மைத்தன்மை கண்டறிவதற்காக சனிக்கிழமை மாலை அற்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் ராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறான அத்துமீறல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்திலும் நாங்கள் தலையிட்டு வனபரிபாலனத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவற்றை தடுத்து வந்திருக்கின்றோம். தற்போதும் மக்களின் வாழ்வாதார குடியிருப்புக் காணிகளை வனபரிபாலனத் திணைக்களம், எல்லைக் கற்களை போட்டு தன்னக படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றன. நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து இவ்வேலைத்திட்டங்களை தடுத்து நிறுத்துவதுடன் மக்கள் வாழ்ந்த இடங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம். வனபரிபாலனத் திணைக்களத்தின் ஊடாக எல்லைக் கற்கள் இடப்படும் பிரதேசங்களில் மக்கள் குடியிருப்புகளும் மற்றும் வாழ்வாதார காணிகளும் காணப்படுகின்றன.

மக்கள் இங்கு பல வருட காலமாக வாழ்ந்ததற்கான ஆவணங்கள் வைத்திருப்பதுடன் பல வருட காலமாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொண்ட ஆதாரங்களும் குடியிருப்புக்கள் காணப்பட்டமைக்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன. ஒரு சிலரிடம் ஆவணங்கள் இல்லாமைக்கான காரணம் கடந்த யுத்தகாலத்தில் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். ஆவணங்கள் இல்லை என்பதே உண்மை இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இவற்றை கருத்தில் கொண்டு தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனபரிபாலனத் திணைக்களம், போன்றன செயற்பட வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் வனபரிபாலனத் திணைக்களத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மக்களின் வாழ்வாதார காணிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் நீதியை மதிக்காதவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவது இலங்கைக்குப் புதிய விடயமல்ல

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி அமைந்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய பாரம்பரிய தாயகம் என்ற நிலைப்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் காலங்காலமாக செயற்படும் கொள்கையே இலங்கையின் பெரும்பான்மை சிங்களவர்களிடம் இருந்து வந்திருக்கிறது. இந்த வகையில் சிங்கள இனவாதத்தின் ஒருமித்த செயற்பாடே ஒரேநாடு ஒரே சட்டம். இத்திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். இல்லையேல் நாடு பாரதூரமான விளைவுகளையே சந்திக்கும்.

நான் ஒரு சிங்கள இனவாதி, சிங்களப் பெரும்பான்மை மக்களின் ஜனாதிபதி என்பதை நிரூபிக்கும் வகையிலேயே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச தொடர்ச்சியாகச் செயறபட்டுவருகிறார். கொவிட் பரவல், பொருளாதார நெருக்கடி, விவசாயிகளது பிரச்சினைகளென மக்களது விடயங்களெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டாகவே இல்லை.

2019ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றவுடனேயே கிழக்கு மாகாணத்துக்கென ஜனாதிபதி செயலணியொன்றினை தொல்பொருள் பாதுகாப்புக்கென தாபித்திருந்தார். அதனால் ஏற்பட்ட குழப்பங்கள், பிரச்சினைகள் இன்னமும் ஓய்ந்துவிடவில்லை. மாகாண சபைகளினுடைய அதிகாரங்களைக் குறைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு மாகாண சபையை இல்லாமற் செய்கின்ற முனைப்புகளும் இருக்கின்றன.

இந்த நிலையில் சிறுபான்மை மக்களினுடைய இருப்பிலும், அவர்களுடைய நம்பிக்கையிலும் மண்ணைப்போடும் ஒரு செயற்திட்டமாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியினுடைய சிந்தனைப் போக்கும், ஆதிக்கமும் இதன் மூலம் வெளிப்பட்டு நிற்கிறது. இதன் உட்பொருளை நாம் எல்லோரும் விளங்கிக் கொண்டு விமர்சிக்காமலும் அதற்கெதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடாமலும் இருக்க முடியாது. ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணி ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டமை தொடர்பில் விமர்சிப்பவர்கள் ஏதோ அதற்கு ஞானசார தேரர் தலைமையாக நியமிக்கப்பட்டமைதான் பிரச்சினை என்பதுபோல் காண்பிக்க முயல்கின்றனர். கொலைக் குற்றவாளிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படுவதும். அவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்படுவதும், நாட்டின் நீதியை மதிக்காது, சட்டத்துக்கு விரோதமாகச் செயற்பட்டவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவதும் இலங்கைக்குப் புதியவிடயமல்ல. இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லிம் என பல்லின மக்களைக் கொண்ட பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவம் என பல மதங்களைப் பின்பற்றுகின்ற, தமிழ் சிங்களம் என பல மொழிகளைப் பேசுகின்ற பல கலாசார பின்பற்றலைக் கொண்டுள்ள நாடாகும்.

இங்கு ஒவ்வொரு இனத்திற்கென்று பாரம்பரியமான தேசவழமை, முற்குக, கண்டிய, ஷரியா சட்டங்கள் காணப்படுகின்றன. இவற்றினைக் கவனத்திலெடுக்காத வகையில் சட்டங்கள் அமைக்கப்படுவது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

மேலைத்தேயத்தவர்களது வருகையின் காரணமாக உருவான சட்ட ஒழுங்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்னர் பல சிக்கல்களை எதிர் கொண்டது. ஆனால் சுதந்திரத்துக்குப் பின்னர் ஆங்கிலேயர்களால் ஒருங்கிணைத்து சிறுபான்மை மக்களின் பாதுக்காப்புக்கான ஏற்பாடுகளுடன் உருவாக்கப்பட்ட சட்டம் இப்போதில்லை. அதனை பெரும்பான்மைத் தேசியம் இல்லாமல் செய்து விட்டது. அதன் பிரதிபலிப்பாக சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் கொண்டு வருகின்றனர். எவ்வாறானாலும் சிறுபான்மை மக்களை பொருட்படுத்தாத அவர்களை அனுசரிக்காத நாட்டின் தலைவருடைய செயற்பாடு வீண் விளைவுகளைக் கொண்டுவரும்.

நாட்டில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற சட்டத்தினை உருவாக்குவதற்கு என்ன தேவை ஏற்பட்டது என்பதனை இந்த இடத்தில் கேட்க விரும்புகின்றேன்.

நாட்டில் இன முறுகல் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய ஜனாதிபதி அதனை வலுப்புடுத்தும் வகையிலான செயற்திட்டங்களை உருவாக்குகிறார்.

வெளிப்பூச்சில் வெளிநாடுகளுக்கு ஒரு முகத்தையும், நாட்டுக்குள் சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு பேரினவாத முகத்தையும் காண்பிக்கும் ஜனாதிபதி பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாக தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருகின்ற ஒருவரை பல்லினம் பல் சமய, பல மொழி பேசுகின்ற மக்களிற்கு சட்டத்தினை நிர்ணயிக்கப் பொறுப்பளிப்பது ஏதோ திருடன் கையில் பொலிஸ் உத்தியோகத்தைக் கொடுப்பதற்கே ஒப்பானதாகும்.

நாட்டில் இராணுவ மயப்படுத்தல், சிங்கள மயப்படுத்தல், ஆதிக்க ரீதியான செயற்பாடு என பல குற்றச்சாட்டுக்கள் இருந்து கொண்டிருக்கையில் மேலும் ஒரேநாடு ஒரே சட்டம் இன்னுமொரு படி மேலே நகர்த்தப்படுவது இலங்கை மக்களின் குறிப்பாக சிறுபான்மை மக்களின் சாபக்கேடாகும்.

# கல்வியை வீழ்த்தும் போதைப் பொருளை ஒழிக்க புறப்படுங்கள்

## நீதிபதி ஸ்ரீநிதி வேண்டுகோள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

முஸ்லிம் சமூகத்தினர் மத்தியிலுள்ள ஒற்றுமை சிதைவடைவதற்கு எவரும் ஒரு போதும் இடமளித்து விடக்கூடாது என்று கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்வியில் முன்னேறியிருந்த கல்முனையின் இன்றைய கல்வி நிலை போதைவஸ்துப் பாவனையினால் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் தயாராக வேண்டும். இதற்காக சட்டத்தரணிகள் முன்னிற்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு, அவரைப் பாராட்டி கௌரவிக்கும் பெரு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை (30) கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது ஏற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இக்கருத்துக்களை குறிப்பிட்டார்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.எல்.எம்.ரமீஸ் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மேலும் கூறியதாவது;

கல்முனை என்பது நாடு முழுவதும் மிகவும் பிரசித்த பெற்ற இடமாகும். நான் கல்முனைக்கு வர முன்னதாகவே இப்பிரதேசம் பற்றி அறிந்து வைத்திருந்தேன். குறிப்பாக நாட்டின் எப்பகுதியிலும் முஸ்லிம்கள் முக்கிய பொறுப்புகளில் இருந்து வந்துள்ளனர். தலைநகரில் எந்த அலுவலகத்திற்கு சென்றாலும் முஸ்லிம்கள் இருப்பார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை குறைந்து வருவதைக் காண முடிகிறது. கல்வியில் கல்முனைப் பிரதேசம் பின்னடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இப்பிராந்தியத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதனாலேயே கல்வி வீழ்ச்சி கண்டு வருகிறது. மாணவர்களும் இளைஞர்களும் வழிகெட்டுச் சீரழிந்து செல்கின்ற அளவுக்கு ஒரு அபாயமிக்க சூழல் இங்கு காணப்படுகிறது. உங்கள் சமுதாயத்தை பாதுகாக்க வேண்டுமானால் இந்த நிலை அவசரமாக கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக சட்டத்தரணிகள் அனைவரும் முன்னின்று போதை ஒழிப்புக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எனது பணிவாக வேண்டுகோளாகும்.





எனது சேவைக்காலத்தில் கல்முனைப் பிராந்தியத்தில் போதைபொருள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக விடயங்களைக் கட்டுப்படுத்துகின்ற விடயங்களில் நான் கரிசனையுடன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன்.

அவ்வாறே இப்பகுதியில் முஸ்லிம்களிடையான ஒற்றுமை குறைந்து வருவதையும் என்னால் அவதானிக்க முடிகிறது. நான் கல்முனைக்கு வர முன்னதாக எங்கு சென்றாலும் எந்த சந்தர்ப்பத்திலும் பிற சமூகத்தினர் மத்தியில், ஒற்றுமைக்கு உதாரணமாக முஸ்லிம் சமூகத்தையே முன்னுதாரணமாக காட்டுவேன். ஆனால் கல்முனைக்கு வந்து 03 வருடங்கள் கடமையாற்றியபோது நான் என் மனதில் இறுத்தி வைத்திருந்த எண்ணத்திற்கு மாற்றமாகவே இங்குள்ள நிலைமையைக் காண முடிந்தது. அது எனக்கு மிகவும் ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. உடன் பிறந்த சகோதரர்கள் மத்தியில் கூட ஒற்றுமையில்லாத காரணத்தினால் பல பிணக்குகள் நீதிமன்றுக்கு வந்துள்ளன. நான் இயன்ற வரை வழக்குகளை நீடிக்காமல் சமரசம் செய்து வைப்பதில் கரிசனை காட்டினேன். ஆகவே, முஸ்லிம்கள் தமக்கிடையிலான ஒற்றுமையை இறுகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். சமூகப் பாதுகாப்பு என்பது ஒற்றுமையிலேயே தங்கியுள்ளதை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எந்த சந்தர்ப்பத்திலும் சமூக ஒற்றுமை சிதைவடைவதற்கு இடமளித்து விடாதீர்கள் என்பதே எனது அன்புக் கட்டளையாகும்.

அத்துடன் பல்லின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் அனைத்து இனத்தவரிடையேயும் ஐக்கியம் பேணுவது முக்கியமாகும். இந்த நிகழ்வைப் பாருங்கள். முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் முஸ்லிம் சட்டத்தரணிகளாகிய நீங்கள் தமிழச்சியாகிய எனக்கு விழா எடுக்கிறீர்கள் என்றால் எம்மிடையே எந்த பேதமும் இல்லை என்பதைத்தானே இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. அப்படியென்றால் இனங்களிடையே மனக்கசப்புகளை ஏற்படுத்துகின்ற விடயங்களில் நாம் விழிப்பாக இருந்து, அத்தகைய சக்திகளை முறியடித்து, இன ஐக்கியத்துக்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்க்க முடியும் என்றார்.

# ‘நெஞ்சில் பூத்த நெருப்பு’ கவிதை நூல் வெளியீட்டு விழா















(பாறுக் ஷிஹான்)

கவிஞர் பல்துறை கலைஞர் அபிநய நாயகர் என்.எம். அலிக்கான் எழுதிய ‘நெஞ்சில் பூத்த நெருப்பு’ கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (30) மாளிகைக்காடு தனியார் விடுதியில் இடம்பெற்றது.

முதலில் நிகழ்வின் ஆரம்பமாக கிறாஆத் தேசிய கீதத்தை தொடர்ந்து கொரோனாவில் உயிரிழந்தவர்கள், கொரோனாப்பணியில் களப்பணியாற்றிய போது உயிர்நீத்த வைத்தியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், பாதுகாப்பு படையினர் எல்லோருக்கும் நினைவு கூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி இடம்பெற்றது.

அடுத்து வரவேற்புரையினை அல் மீசான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் நிகழ்ச்சி திட்டப்பணிப்பாளரும்இ சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம். ஸஹிர் மேற்கொண்டதுடன் தலைமையுரையினை அல் மீசான் பௌண்டஷன்இ ஸ்ரீலங்காவின் தவிசாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின்பணிப்பாளர் சபை உறுப்பினருமான, சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமர் உரையாற்றினார். குறித்த நூலின் ஆய்வுரையை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவரும், பிரபல இலக்கிய செயற்பாட்டாளருமான, கவிஞர், ஆசிரியர் ஜெஸ்மி மூஸா மேற்கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சிறப்புரையினை பிரபல ஆசிரியர் றிசாத் செரீப்பும் சிறப்புரையினை அல் மீசான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் ஆலோசனை சபை தவிசாளரும்,கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் தவிசாளருமான இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபாவும்அஹமட் அலி வைத்தியசாலையின் முதல்வர், பிரபல சமூக சேவகர் எம்.எம். இஸ்ஸதீன் நூலின் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் முஸ்லிம் விவகார தேசிய இணைப்பாளரும், பிரபல அரசியல் சமூக செயற்பாட்டாளருமான சிராஸ் ஜுனூஸ்சட்ட மொழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளராக இருந்த இலங்கை பொதுசேவை ஆணைக்குழுவின் கௌரவ உறுப்பினர், ஓய்வுபெற்ற சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல். எம். சலீம் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பிரபல பாடகர் டைட்டானிக் இசைக்குழுவின் பிரதானி எம்.எச். றியாஸ்கான் இசைத்தட்டு அறிமுக நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# இராகலையில் 7 குடும்பங்களை சேர்ந்த ௨௨ பேர் பாதிப்பு

(க.கிஷாந்தன்)

மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பிற்பகல் வேளையில் பெய்யும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்நிலையில் நுவரெலியா, இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை முதலாம் பிரிவு பகுதியில் வெள்ளம் புகுந்ததையடுத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த மழையினால் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் % குடும்பங்களை சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வீடுகளின் கூரைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடுகளின் தளபாடங்கள் மற்றும் பொருட்களும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் பாதிக்கப்பட்டவர்களை தோட்ட நிர்வாகத்தின் அதிகாரிகள் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் இப்பகுதி கிராமசேவகர் ஊடாக இராகலை பொலிஸார் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களை தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பாதுகாப்பு கருதி தங்க வைக்கப்பட்டுள்ளனர்.





இவர்களுக்கான நிவாரண உதவிகளை நுவரெலியா பிரதேசசபையின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

அத்தோடு, இந்த பகுதியில் தொடர்ச்சியாக இவ்வாறான நிலைமையே காணப்படுவதாகவும், குடியிருப்பாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# திருமலையில் தடைசெய்யப்பட்ட ஹக்கபடஸ்களுடன் நபரொருவர் கைது

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறாம் வாய்க்கால் பகுதியில் ஹக்கபடஸ் என்றழைக்கப்படும் 16 வாய் வெடிகளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மொரவெவ பிரதேசத்தில் அண்மைக்காலமாக யானைகள் உயிரிழந்து வருவதுடன் மிருகங்களை வேட்டையாடும் வீதம் அதிகரித்து வருவதாக பொலிசாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

மொரவெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் பன்குளம் பிரதேசத்தில் சில இடங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதியால் சென்ற சந்தேகநபர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 16 வாய் வெடிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 35 வயது உடையவர் எனவும் குறித்த நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மூதூரில் 600 ஏக்கர் விவசாய காணிகள் விடுவிப்பு விவசாய நடவடிக்கை அங்குரார்ப்பணம்



**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இறால்குழி கிராமத்தில் ஏனைய காடுகள் விடுவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் அளவிலான விவசாயம் செய்வதற்கான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

இறால்குழி பிரதேசத்தில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

பல வருட காலமாக விவசாயம் செய்யப்படாமல் இப்பிரதேசம் கைவிடப்பட்டதாக காணப்பட்டது. முன்னர் இப்பிரதேசங்களில் பயிர்ச்செய்கை மேற் கொண்டதாகவும் அதன் பின்னர் வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்கள் பிரதேசத்துக்குள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்று பிரதேச விவசாயிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்

எனவே இப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை தந்துதவுமாறு இப்பிரதேச விவசாயிகள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து இப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக இதன்போது அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பயிர் செய்ய முடியுமான ஒவ்வொரு பிரதேசத்திலும் விவசாயசெய்கையினை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளதாகவும் . அதற்கிணங்க திருகோணமலை மாவட்டத்தில் விவசாயம் செய்ய முடியுமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, விடுவிக்கப்பட்டு , அப்பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இவ் வேலைத் திட்டத்திற்கு அமைய விவசாயம் செய்ய முடியுமான பிரதேசங்களை இனங்கண்டு அவற்றின் விவசாயம் செய்யவுள்ள தடையை நிவர்த்தி செய்து மக்களுக்கு விவசாயம் செய்வதற்கான அனுமதி வழங்குவதற்கான பொறிமுறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

இதன் மூலம் மாவட்டத்தினுடைய உற்பத்தி அதிகரித்து மேலதிகமாக உற்பத்திகளை வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு வழங்க கூடியதாக அமையும். இதன் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாக அமைந்து வருமான மட்டம் உயர்வடைய காரணமாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் ,பிரதேச அரசியல் பிரமுகர்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் விவசாய சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலுக்கு கண்டனம்




**(வவுணதீவு எஸ்.சதீஸ்)**

பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடாத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலுக்கு கண்டனமும் படுகொலை செய்யப்பட்டோருக்கு ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனையும் வெள்ளிக்கிழமை 6 மணி தொடக்கம் 7 மணிவரை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அதன் தேசிய அமைப்பாளர் சி.வரதநிரோசன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நவராத்திரி தினத்தன்று ங்களாதேஷில் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இந்து ஆலையங்கள், தாக்கப்பட்டு இந்துக்களின் வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு இந்து துறவி உட்பட பலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்ததுடன் இதற்கு எதிர்ப்பினையும் தெரிவித்தனர்.

இதன்போது இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சி.வரதநிரோசன் கருத்து தெரிவிக்கையில்,

பங்களாதேசில் 2013 ம் ஆண்டில் இருந்து இதுவரை 3 ஆயிரத்து 680 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் நவராத்திரி தினத்திலே இந்துக்களுக்கு எதிராக இஸ்லாமிய மதவெறியாளர்களால் கொலை வெறி தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் சுவாமி நிதிதாஸ் பிரபு உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன். 550 வீடுகள், 442 கடைகள், தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் 861 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் பல பெண்கள் மாபங்கப்படுத்தப் பட்டதுடன் 1608 இந்து மற்றும் பௌத்த விகாரைகள். இராமகிருஷ;ண மிஷன், உட்பட வணக்கஸ்தலங்கள் உட்பட 51 அம்மன் சக்தி பீடங்களில் இரண்டான தாட்சாயினுடைய 50 வது சக்தி பீடமான அவரது வலதுகை வீழ்ந்த இடம் , நாக்கு வீழ்ந்த இடமான இரு சக்தி பீடகள் தாக்கப்பட்டுள்ளது .

இவ்வாறான தாக்குதல் இனி மேல் இடம்பெறக்கூடாது எனவும் இதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக்கும் முகமாக கையெழுத்து வேட்டையினை ஆரம்பித்துள்ளதாகவும் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சி.வரதநிரோசன் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசிய எல்லைப்பரப்பில யதார்த்தமாக்குவதற்குரிய வரலாற்றில் முயற்சி தமிழ் மக்களாட்சி செயற்குழு

**(வடமலை ராஜ்குமார், அ.அச்சுதன் ,கதிரவன்)**

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்தொருமிக்கும் வேலைத் திட்டத்திறகான கேள்விக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.மிக விரைவில் அவற்றை மக்கள் மத்தியில் சமர்ப்பித்து அவர்களிடம் அபிப்பிராயங்கள் பெறப்படுமென் சட்டத்தரணி எப்.எஸ். விஜையகுமார் தெரிவித்தார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்தொருமிக்கும் வேலைத்திட்டத்தை ஆரமப்பித்துள்ள தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் செய்தியாளர் மாநாடு நேற்று சனிக்கிழமை திருகோணமலையில் இடம் பெற்றது.அங்கு விளக்கமளித்த போதே சட்டத்தரணி விஜையகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் ஏற்பாட்டாளர்களான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்கறிய கலாநிதி நோயல் இமானுவேல், திருகோணமலை தென்கையிலை ஆதீனத்தின் குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் தமிழ் தேசியத்தை மக்களின் இயல்பான கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தி அவற்றை அவற்றை ஆவணப்படுத்த வேண்டும்.தமிழ் தேசிய கோரிக்கைகளை முன்வைக்கம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கையில் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கும் வகையில் மக்களின் கருத்துக்கள் கேள்விகள் மூலமாக உறுதிப்படுத்தப்படும்.இவ் வேலைத்திட்டம் தொடரபாக அரசியல் பத்தி எழுத்தாளர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் ஊடக நிறுவனங்களின் செய்தியாசிரியர்கள் ஆகியோருடனும் இது பற்றி கலந்துரையாடி இருப்பதாக சட்டத்தரணி வி ியகுமார் தெரிவித்தார்.



ஈழத்ததமிழ் மக்கள் கூட்டுரிமையின் அடிப்படையில் அமைந்த கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஆவணப்படுத்துவதே தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் பிரதான நோக்கம் என ஆயர் நோயல் இமனுவேல் தெரிவித்தார்.

மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தை இணைய வழி மூலமாக உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஆயர் தெரிவித்தார். தமிழ் தேசிய பரப்பு எல்லை மற்றும் தமழ் தேசிய கோட்பாட்டின் அடிப்படைகளை தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கும் வகையில் மக்களின் கருத்துக்கள் அமைய வேண்டும்.மக்களின் கருத்துக்கள் அவ்வாறு ஒருவித்த குரலில் அமையுமாக இருந்தால் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கான தங்கள் செயற்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று தவத்திரு அகத்திய அடிகளார் இச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர்களின் கேள்விக்கு விளக்கமளித்த விஜயகுமார் , தமிழ் தேசிய நிலைப்பாட்டில் மக்கள் தெளிவாக இருப்பதாகவும் அதனை செம்மைப்படுத்தி ஆவணப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் விபரித்தார். எந்த ஒரு அரசியல் கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தும் அல்லது அவர்களை ஒரே கூட்டமைப்பாக செயற்பட வைப்பதும் தமது நோக்கம் அல்ல என்றும் தமிழ் தேசிய கருத்தியலை ஒருமித்த குரலில் பேசவைப்பதே தமது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இந்த மக்களாட்சிக் குழுவின் செயற்திட்ட இணைப்பாளராக சட்டத்தரணி விஜயகுமார் செயற்படுகின்றார் சட்டத்தரணிகளான யாழினி கௌதமன் வீ.எஸ் தனஞ்சயன் உள்ளிட்ட 05 சட்டத்தரணிகள் இணைந்து பணியாற்றுவது குறிப்படத்தக்கது.

# களுமுந்தன் வெளியில் விவசாயிகளுக்கு இலவசமாக பயிர்விதைகள் வழங்கி வைப்பு





மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின்கீழ் பழுகாமம் விரிவாக்கல் பிரிவின் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர் மாற்றுத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிலக்கடலை மற்றும் கௌபி விதைகள் இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு, சனிக்கிழமை (30) களுமுந்தன்வெளி கிராமத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவாட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மாவட்ட பிராந்திய பணிப்பாளர் நாகரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி, நவகிரிப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் திருமதி.கீதா அருண், உதவி விவசாயப் பணிப்பாளர் ரி.மேகராசா, பாடவிதான உத்தியோகஸ்த்தர் என்.லக்ஸ்மன், மற்றும், விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும், அதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பி.ஈ.ஐ.எஸ்.ஈ.ஐ.பி. திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 50 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் அப்பகுதியைச் சேர்ந்த 100 இற்கு மேற்பட்ட விவசாயிகள் நன்மையடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பசில் ராஜபக்ஷவும் ஞானசார தேரருடன் உள்ளார் என்பது தெளிவாகியுள்ளது -இம்ரான் எம்.பி

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

பசில் ராஜபக்ஸவும் ஞானசார தேரருடன் உள்ளார் என்பது தெளிவாகியுள்ளது .அரசுக்கு ஆதரவளித்த முஸ்லிம் உறுப்பினர்களின் கடைசி ஆயுதமும் இதனால் புஷ்வாணமாகியுள்ளதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஆளும் கட்சி கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா ஞானசார தேரர் தொடர்பாக வெளியிட்ட கருத்தையும் அதற்கு அமைச்சர் பசில் ராஜபக்ஸ வழங்கிய பதிலையும் ஊடகங்கள் வாயிலாக அறிய கிடைத்தது.

இது தொடர்பாக பசில் ராஜபக்ஸ அளித்த பதிலில் இருந்து அவரும் ஏனைய ராஜபக்ஸக்களை போல் ஞானசார தேரருடனேயே உள்ளார் என்பது தெளிவாக தெரிந்தது.

அரசுக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பசில் ராஜபக்ஸ இனவாதமற்றவர், முஸ்லிம்களுக்கு சார்பானவர், அவர் ஜனாதிபதியானால் இனவாதிகளை அடித்து விரட்டி விடுவார் என்ற பிரச்சாரத்தையே இதுவரை காலமும் முன்னெடுத்து வந்தனர்.

இவ்வாறு அடுத்த தேர்தலில் பசில் ராஜபக்ஸவுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய அவர்கள் வைத்திருக்க கடைசி ஆயுதமும் இதன்மூலம் புஷ்வாணமாகிவிட்டது.

பசில் ராஜபக்ஸ உட்பட அனைத்து ராஜபக்ஸக்களும் ஞானசார தேரரின் பின்னால் உள்ளனர்.ராஜபக்சக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலையே ஞானசார தேரர் நிறைவேற்றுகிறார்.

இதுவரை காலமும் வாயை மூடியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா இப்பொழுதாவது வாயை திறந்திருப்பது பாராட்டுக்குரியது.அமைச்சு பதவி கிடைக்கவில்லை,அவர் எதிர்பார்த்த சலுகைகள் எதுவும் கிடைக்கவில்லை.இருந்தும் இருபதாம் திருத்த சட்டமூலத்துக்கு வாக்களித்தார்,துறைமுக நகர சட்டமூலத்துக்கு ஆதரவளித்தார். காதி நீதிமன்றம் ,மாடறுப்பு தடை என பல சட்டமூல திருத்தங்கள் தொடர்பாக பேசப்பட்டபோதும் அமைதியாக இருந்தார். ஆனால் தொடர்ந்தும் இவ்வாறு அமைதியாக இருந்தால் தனது அரசியல் இருப்பே கேள்விக்குறியாக மாறிவிடும் என உணர்ந்து இப்போது பேசியுள்ளார். அத்துடன் சீனாவுக்கு துறைமுக நகரம், இந்தியாவுக்கு மேற்கு முனையம் என வழங்கப்பட்ட போது அமைதியாக இருந்த அதாவுல்லா உட்பட விமல் கூட்டணி அமெரிக்காவுக்கு மின்னுற்பத்தி நிலையத்தை வழங்கும்போது கூட்டாக எதிர்ப்பதின் பின்னணியில் சீனா உள்ளதா என்ற சந்தேகமும் நிலவுகிறது என்றார்.

# துறைநீலாவணையில் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு

**(எஸ்.சபேசன்)**

அமரர் ஓய்வு பெற்ற அதிபர் சா.சரவணமுத்து அவர்களின் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட திடலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 30 ஆம் திகதி சனிக்கிழமை துறைநீலாவணை பொது விளையாட்டுமைதானத்தில் அன்னாரது புதல்வர் கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

40 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு அரங்குக்கான முதலாவது அடிக்கல்லினை ; ஓய்வு பெற்ற அதிபர் சா.சரவணமுத்து அவர்களின் பாரியார் நட்டு வைத்தார்.

இந்நிகழ்விற்கு முதன்மை அதிதியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிபர் கே.கருணாகரன் ,கௌரவ விருந்தினர்களாக களுவாஞ்சிகுடி பிரதேசசெயலாளர் திருமதி வில்வரெத்தினம் சிவப்பிரியா மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் எந்திரி என்.சிவலிங்கம், கிழக்குமாகாண உதவிப் பிரதமசெயலாளர் ஜீ.பிரணவன், லகுகல பிரதேசசெயலாளர் ந.நவநீதராசா, கல்முனை வடக்குப்பிரதேசசெயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உட்பட பலர் கலந்துகொண்டதுடன் துறைநீலாவணைக்கிராமத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாடசாலைகளின் அதிபர்கள் மத்திய விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் வரவேற்பு உரையினை மத்தியவிளையாட்டுக்கழகத்தின் தலைவர் ரி.தயாளன் நிகழ்த்தியதுடன் நன்றியுரையினை செயலாளர் சா.மோகன்ராஜ் நிகழ்த்தினார்.



# இழந்துபோன கல்வியை மீட்க றோட்டரிக்கழகத்தின் உதவி!







கொரோனாவால் இழந்த கல்வியை மீட்க அரசாங்கம் பல வகையான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி படிப்படியாக நான்குகட்டங்களாக பாடசாலைகளை திறந்துவருகிறது.

அதன்படி எதிர்வரும் 8 ஆம் திகதி தரம் 10, 11 ,12 ,13ஆகிய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டுவருகிறது.

அதற்கு அணிசேர்க்குமாப்போல் பல்வேறு அமைப்புகள் பாடசாலைகளை மீளஆரம்பிப்பதிலும் இழந்தகல்வியை மீட்பதிலும் ஒத்துழைப்பை நல்கிவருகின்றன.

அந்தவகையில், சர்வதேச றோட்டரிக் கழகத்தின் கல்முனைக்கிளை அம்பாறை மாவட்டத்தில் இதற்கான உதவிகளை வழங்கிவருகிறது.

ஆம்.சர்வதேச றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளை அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 10லட்ச ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கிவருகிறது.

அதன் அங்குரார்ப்பண விழா கடந்த வியாழனன்று சம்மாந்துறை வலயத்திலுள்ள நாவிதன்வெளிக்கோட்டத்தின் அன்னமலை சிறிசக்தி வித்தியாலயத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

வித்தியாலயஅதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளைத்தலைவர் றோட்டரியன் த.புஸ்பராசா, செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம், சம்மாந்துறை வலயம் சார்பில் உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ,பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ்.அற்புதராஜா உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

நிண்டகாலத்திற்குப்பிறகு பாடசாலையில் அதிதிகள் பூமாலைகள் சூட்டப்பட்டு முறையான விழாவொன்று பெற்றோர் ஆசிரியர் மாணவர் சகிதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அங்கு கல்முனை றோட்டரிக்கழக செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம் உரையாற்றுகையில்:

அவுஸ்திரேலியா நாட்டு கன்பரா றோட்டரிக்கழகம் இவ்வுதிக்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தது. அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 1.1மில்லியன் ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கிவருகிறது.

முதற்கட்டமாக இன்று நாவிதன்வெளிக் கோட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய அன்னமலை சிறிசக்தி வித்தியாலயம் குடியிருப்புமுனை சண்முகா வித்தியாலயம் வீரச்சோலை மகாவித்தியாலயம் ஆகிய 3 பாடசாலைகளின் 187 மாணவர்களுக்கான கற்றலுபகரணங்கள் வழங்கிவைக்கப்படுகின்றன.

பாடசாலை பைகள் அப்பியாசக்கொப்பிகள் சப்பாத்துகள் மழைக்கோர்ட் வெப்பமானி உள்ளிட்ட உபகரணங்கள் இதில் அடங்குகின்றன. இதற்கென 3லட்சத்து 30ஆயிரத்து 400ருபா செலவு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக இழந்தகல்வியை மாணவர்கள் தங்குதடையின்றி மீளப்பெற்று நற்பிரஜைகளாக வரவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். என்றார்.

சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பேசுகையில்:

உலகில் போலியோ நோயை முற்றாக விரட்ட அனுசரணைபுரிந்த சர்வதேச றோட்டரிக்கழகம் இப்பிராந்தியத்தில் கடந்தகாலங்களில் பல்வேறு வகையான மனிதாபிமான சேவைகளை செய்துவருவதை நானறிவேன். அதிபர் பாரதிதாசனின் அயராத முயற்சியால் இப்பாடசாலை புதுப்பொலிவுபெற்றுவருவது கண்டு அகமகிழ்வடைகிறேன். மிகவும் பின்தங்கிய இப்பாடசாலை மாணவர்க்கு இவ்வுதவிகள் மிகவும் பிரயோசனமாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை. றோட்டரிக்கழகத்தினருக்கு எமது வலயம்சார்பில் நன்றிகள் என்றார்.

இறுதியில் மாணவருக்கு கற்றலுபகரணங்கள் அதிதிகளால் வழங்கிவைக்கப்பட்டதோடு தலைவர் த.புஸ்பராசா உரையாற்றியதுடன் ஆசிரியர் நன்றியுரையாற்றினார்.

# முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்டபோது துணிச்சலுடன் தடையுத்தரவு பிறப்பித்தவர் நீதிபதி ஸ்ரீநிதி

## பாராட்டு விழாவில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் புகழாரம்





**( அஸ்லம் எஸ்.மௌலானா)**

கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்டபோது அம்பாறை மாவட்டத்தில் பலரது ஜனாஸாக்களை எரிக்காமல் பாதுகாக்கும் வகையில் துணிச்சலுடன் தடையுத்தரவு பிறப்பித்து, தீர்ப்புகளை வழங்கிய நீதி தேவதையான கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள், முஸ்லிம் சமூகத்தின் இதயங்களில் நீங்கா இடத்தைப் பிடித்திருக்கிறார் என்று சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலரும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தனது 20 வருட கால நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு, அவரைப் பாராட்டி கௌரவிக்கும் பெரு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை (30) கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வாழ்த்துரை நிகழ்த்துகையிலேயே சட்டத்தரணிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.எல்.எம்.ரமீஸ் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு சங்கத்தின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விசேட நினைவுச்சின்னம் வழங்கி, வாழ்த்துரை நிகழ்த்தினார். அத்துடன் சிரேஷ்ட சட்டத்தரணி றைசுல் ஹாதி, நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தம்பதியினரை பொன்னாடை போர்த்தி, வாழ்த்துரை நிகழ்த்தினார்.

மேலும், சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.எஸ்.எம்.ஜெமீல், ஏ.எம்.பதுர்தீன், அன்சார் மௌலானா, ஆரிப் சம்சுதீன், யூ.எம்.நிசார், ஏ.எல்.நதீர், எம்.எஸ்.எம்.ரஸ்ஸாக், லியாகத் அலி, சாரிக் காரியப்பர், கலாநிதி ஏ.எல்.ஏ.கபூர் ஆகியோரும் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் நீதித்துறை புலமை, மனிதாபிமானம், அர்ப்பணிப்பு, மற்றும் நெறி தவறா நேர்மையுடன் கூடிய பண்புகளையும் ஆற்றல்களையும் சுட்டிக்காட்டி உரையாற்றினர்.

கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி கிடைக்க முன்னர் நாடு முழுவதும் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலாத்காரமாக எரிக்கப்பட்டன. முஸ்லிம் சமூகம் கதறக்கதற இந்த அநியாயம் அரங்கேற்றப்பட்டது. முஸ்லிம்களின் அடிப்படையானதும் தவிர்க்க முடியாததுமான உரிமையொன்று மறுக்கப்பட்டது. இந்த அநியாயத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு ஏற்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. கல்முனை உட்பட பல பகுதிகளிலும் கீழ் நீதிமன்றமான நீதவான் நீதிமன்றங்கள் இவ்வாறான வழக்குகளுக்கு தீர்ப்பளிக்கும் அதிகாரம் தமக்கு இல்லையென கைவிரித்திருந்தன.

இத்தகைய சூழ்நிலையில்தான் அம்பாறை மாவட்டத்தில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த பலரது ஜனாஸாக்கள் குறித்து கல்முனை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டதுடன் குறித்த ஜனாஸாக்களை எரிக்காமல் வைத்திருக்குமாறு நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் கட்டளையிட்டு, அவற்றை நல்லடக்கம் செய்யும் வரை பாதுகாத்து வைக்கும் வகையில் தனது பதவியையும் உயிரையும் துச்சமெனக் கருதி, துணிச்சலான தீர்ப்புகளை வழங்கியிருந்தார் என்று சட்டத்தரணிகள் பலரும் தமதுரையின்போது சுட்டிக்காட்டி, முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டனர்.

'நீதி தேவதை' என்பதற்கு தராசை ஏந்தியிருக்கும் ஒரு சிலைதான் காண்பிக்கப்படும். ஆனால், நிஜத்தில் அத்தகையதொரு நீதி தேவதையாக ஸ்ரீநிதி அம்மையாரைக் காண்கிறோம் என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

விழாவின் ஆரம்பத்தில், மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.யூ.தாஹா செய்னுதீன், எம்.கே.பேரின்பராஜா ஆகியோருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, மறுமை ஈடேற்றத்திற்காக பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விழாவில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் நிகழ்வுகளை நெறிப்படுத்தியதுடன் நன்றியுரையும் நிகழ்த்தினார். கனிஷ்ட சட்டத்தரணி சுஹால்ஸ் பிர்தௌஸ் வாழ்த்துப்பா வாசித்துக் கையளித்தார். கனிஷ்ட சட்டத்தரணிகளான துலாஞ்சலி, பெனாஸிர் ரஹ்மியா, ராமேஸ்வரி, இயாஸ்தீன் ஆகியோரும் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் உன்னதமான நீதிச் சேவைகளை எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் நீதிமன்றங்களில் பணியாற்றும் பெரும் எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் கலந்து சிறப்பித்து, விடைபெறும் நீதிபதிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

# மடத்தடி மீனாட்சி அம்மனாலய வளாகம் புதுப்பொலிவு பெறுகிறது





**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வளாகம் நிண்ட காலத்திற்குப் பிற்பாடு தற்போது புதுப்பொலிவு பெற்று வருகிறது.

ஆலய பரிபாலனசபையின் புதிய தலைவராக பிரபலசமுகசேவையாளரும், காரைதீவு பிரதேச சபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவானதன்பிற்பாடு தினமும் ஒவ்வொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பலவருடகாலமாக அங்கு காடுமண்டிக்கிடந்த ஆலய முற்புற வளாகச்சூழல், நேற்று ஜேசீபி கனரக இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்பட்டது. தொண்டர்களின் சிரமதானமும் இடம்பெற்றது.

ஆலய நுழைவாயில் வரவேற்பு கோபுரம் பிரதானவீதியில் ஆலயத்தை சுட்டும் ஆலயஅறிவித்தல்பதாதை என்பன நவீனமயப்படுத்தப்பட்டுவருகின்றன.

முன்னதாக, புதிய ஆலய அமைப்பு மற்றும் உள்வீதி வெளிவீதி என்பன பிரபல குருக்களான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் ஆகமவிதிமுறைகளுக்கமைய அளவீடு செய்யப்பட்டு எல்லைகள் இடப்பட்டன. கூடவே ஆலய முன்முகப்பு, ஆலயத்தினுள் கர்ப்பக்கிரகம் ,பரிவாரமூர்த்திகள் உள்ளிட்ட பல விடயங்களில் ஆலோசனை பெறப்பட்டு அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆலயதலைவர் கி.ஜெயசிறிலின் ஏற்பாட்டில் துரிதமாக ஆலய கும்பாபிசேகத்திற்கு முன்னதான பணிகள் பல கோணங்களிலும் ஜருராக இடம்பெற்றுவருகின்றன. ஆலயபரிபாலனசபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜாவும் உடனிருந்து புதிய திட்டங்களை வடிவமைத்து உதவிவருகிறார். உதவியாக செயலாளர் கே.சண்முகம் உள்ளிட்ட பரிபாலனசபை நிருவாகிகளின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுவருகிறது.

கொரோனாவுக்குப்பின்னர் தற்போது தினமும் ஆலயத்திற்கு பல ஊர்களிலுமிருந்து பக்தர்கள் வரத்தொடங்கியுள்ளனர். வெள்ளிக்கிழமைகளில் விசேடபூஜைகள் முறையாக நடைபெறத்தொடங்கியுள்ளன. பக்தர்கள் பாதுகாப்பாக பொங்கலிடுவதற்கும் ஆலய களஞ்சியசாலை மற்றும் அலுவலகத்திற்குமாக புதியதொரு கட்டடம் விரைவாக நிருமாணிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் தீபாவளி தினம் (4) மற்றும் பூரணைதின பூஜைகள் விசேட பூஜையாக இடம்பெறவிருக்கின்றன. அத்துடன் அங்கு ஆன்மீகச்சொற்பொழிவு இடம்பெறவிருப்பதுடன் கும்பாபிசேகம் தொடர்பான முக்கிய அறிவித்தல்கள் தலைவரால் அறிவிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வாழும் ஊர்களின் பொதுக்கோவிலான இங்கு சகலரும் வருகை தந்து சக்திமிக்க அம்பாளின் அருளைப் பெறவேண்டும். மேலும் ஆலயவளர்ச்சிக்கு சகல மக்களும் பேராதரவைத்தருவதோடு எவ்வித வேறுபாடுமின்றி புதிய பரிபாலனசபையிலும் கும்பாபிசேகக்குழுவிலும் மகா கும்பாபிசேகத்திலும் பங்கெடுத்து பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்' என கடந்தவெள்ளியன்று இடம்பெற்ற விசேடபூஜையின்பின்பு புதிய தலைவர் கி.ஜெயசிறில் கன்னி உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# திருகோணமலையில் 18 பாடசாலைகளில் 5031 மாணவர்களுக்கு கோரோனா தடுப்பூசி

## பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**




நாட்டின் அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சு நிலையில் திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் உள்ள 18 பாடசாலைகளில் 503% சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இன்று முதலாம் திகதி முதல் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிடற்குற்ப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்குவதற்கான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் 2ஆம் திகதி திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் அபேயபுர மகா வித்தியாலயத்திலும் 3ஆம் திகதி மெதடிஸ் பெண்கள் கல்லூரியிலும் சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது

மேலும் எதிர்வரும் 5ஆம் திகதி புனித மரியாள் கல்லூரியிலும் 6ஆம் திகதி ராஜகிரிய வித்தியாலோக வித்தியாலயத்திலும் அபேயபுர பெண்கள் உயர்நிலை பாடசாலையிலும் இவ்வாறு கொரோனா தடுப்பு மருந்து செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 9ஆம் திகதி திருகோணமலை சாஹிரா கல்லூரியிலும் 10ஆம் திகதிகளில் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்திலும் நாமகள் வித்தியாலயத்திலும் அதைத்தொடர்ந்து 11ஆம் திகதி பெருந்தேரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், சென் சேவியர் மகாவித்தியாலயம் நாமகள் மகாவித்தியாலயத்திலும் 15ஆம் திகதி புனித சூசையப்பர் கல்லூரியிலும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் ஸ்ரீ சண்முகா இந்து பெண்கள் கல்லூரி, விவேகானந்தா கல்லூரி மற்றும் ஸ்ரீ கோணலிங்கம் மகா வித்தியாலயத்திலும் இவ்வாறு கொரோனா தடுப்பு மருந்து செலுத்தும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது

அதனடிப்படையில் பெற்றோர்களின் அனுமதியுடன் இவ்வாறு தடுப்பூசியினை தவறாமல் மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறும் கோவிட் 19 கொரோனா தொற்றிலிருந்து மாணவர்களையும் நாட்டையும் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் வேண்டுகோள்விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL.,CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT




# துறைநீலாவணை கிராமத்தை விட்டு மட்டக்களப்பின் வரலாற்றுப் பாரம்பரிய விழுமியங்களை பேச முடியாது

## மட்டு.மாவட்ட செயலாளர் க.கருணாகரன் புகழாரம்



(இ.சுதாகரன்)

கணனி இல்லையென்றால் மனிதன் இல்லை என்பது போல துறைநீலாவணை கிராமத்தை விட்டு மட்டக்களப்பின் வரலாற்றுப் பாரம்பரிய விழுமியங்களை பேச முடியாது. அந்த வகையில் மாவட்டத்தில் மிக முக்கிய கிராமமாக வரலாற்றுத் தடத்தில் இடம்பிடித்துள்ளது என மட்டு மாவட்ட செயலாளர் க.கருணாகரன் தெரிவித்தார்.

சாமித்தம்பி சரவணமுத்துவின் ஞாபகார்த்தமாக கூடைப்பந்தாட்ட திடலுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் நவநீதன் சரவணமுத்து தலைமையில், துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (30) இடம்பெற்றபோது பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைநீலாவணைக் கிராமம் பல்வேறு செயற்பாடுகளுக்கு கை கொடுத்த கிராமம் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். ஏனைய கிராமங்களை விட கல்வி செல்வம், வீரம் ஆகிய துறைகளில் சரித்திரப் பெயர் பெற்ற கிராமமாக விளங்குகிறது.

கல்லோயா குடியேற்றத்திட்டங்களிலுள்ள பெரும்பாலான எல்லைக் கிராமங்களில் துறைநீலாவணைக் கிராம மக்கள் செறிந்து வாழும் விற்பனராகவுள்ளனர். யுத்தச் சூழலிலும் இருப்பிடத்தை விட்டு அகலாமல் எல்லைக் கிராமங்களை பாதுகாத்து வளப்படுத்திய பொறுப்பு துறைநீலாவணை கிராம மக்களையே சாரும்.

அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு துறைநீலாவணை கிராமம் பல்வேறு வழிகளில் முக்கிய இடத்தையும் ஏனைய கிராமங்களுக்கு முன்மாதிரியாகவும் இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில கிராமங்களே அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. அந்த வகையில் இந்த கிராமமும் மிக முக்கிய இடத்தினை பெற்றுள்ளது.

துறைநீலாவணை கிராமத்தில் பிறந்தவர்களே கிழக்கு கல்வி, கலாசார பணிப்பாளர்களாகவும் மருத்துவ நிபுணர்களாகவும் பொறியியலாளர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களாகவும் கடமையாற்றும் நிலையில் இந்தக் கிராமத்தில் பிறந்த லோகநாதன் என்பவரின் பெயரிலே லோகநாதன் கொள்கை என்ற கோட்பாடு இருக்கிறதென்பது எவ்வளவு பேருக்கும் தெரியும் என்று நான் நினைக்கவில்லை.

அவ்வளவுக்கு சிறந்த விற்பனர்கள், கல்வியாளர்கள், சேவையாளர்கள் உருவாகிய கிராமமாக திகழ்கிறது.

துறைநீலாவணை கிராமத்தில் கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இடம்பிடித்தது போல ஒவ்வொருவரும் சேவை உதவிகளினூடாக கிராமத்தில் இடம்பிடிக்க வேண்டும்.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எந்திரி என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண உதவிப் பிரதம செயலாளர் ஜி.பிரணவன், லஹுகல பிரதேச செயலாளர் என். நவநீதராஜா, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஜெ.அதிசயராஜ், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.காப்தீபன் உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# முஸ்லீம் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்வு.



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட முஸ்லீம் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்வு தன்னாமுனை மியானி மண்டபத்தில் கோவிட் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி சனிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நாவலடி, ஓட்டமாவடி, ஓட்டமாவடி மத்தி, ஏறாவூர் நகர், மஞ்சந்தொடுவாய், காத்தான்குடி, ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சுமார் 50 பெண்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களை சேர்ந்த பல்கலைகழக மாணவிகள், மகளீர் சங்க உறுப்பினர்கள், முஸ்லீம் காதி நீதிமன்ற பணியாளர்கள், முன் பள்ளி ஆசிரியர்கள், மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் என்போர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விழிப்புணர்வு நிகழ்வானது 1951ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முஸ்லீம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பாகவும் அதில் பெண்களின் உரிமை சார்ந்த திருத்தங்களை எவ்வாறு கொண்டுவருவது என்பது தொடர்பாகவும் அமைந்திருந்தது. இச் சட்ட விழிப்புணர்வு செயலமர்வை எமிஷா டேகள் (சட்டத்தரணி ) மற்றும் ஹஷானா ஷேகு இஷைதீன் (சட்டத்தரணி ) ஆகியோர் வளவாளர்காளாக இருந்து ஜூணிட் செயலி மூலம் அமர்வை நடத்தினார்கள். இவர்கள் இருவரும் முஸ்லிம் தனிநபர் சட்ட சீர்திருத்த நடவடிக்கை குழுவின் இணை ஸ்தாபகர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சட்ட விழிப்புணர்வு செயலமர்வு ஊடாக இலங்கையில் காணப்படும் குடும்ப சட்டங்களின் தற்போதைய நிலை தொடர்பாகவும், இலங்கையில் காணப்படும் இரு வகை குடும்பங்களில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாகவும் இஸ்லாமிய பெண்களின் உரிமைகளின் சட்ட ரீதியான விளைவுகள் தொடர்பாகவும் இதன்போது குறித்த பெண் சமூகத்தினருக்கு Zoom செயலி ஊடாக சிரேஸ்ட சட்டத்தரணிகள் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டன.

# ரோட்டரி கழகத்தின் சார்பில் காலத்தின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது








திருகோணமலை ரோட்டரி கழகத்தின் சார்பில் சனிக் கிழமை திருகோணமலை ரோட்டரி கழகத்தின் தலைவர் திரு த. அகிலனின் வேண்டுகோளின்படி, ரோட்டரி கழக உறுப்பினர்களால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவளை பிரதேசத்தின் உப்பூரல் மற்றும் சீனன்வெளி கிராமங்களில் உள்ள 14 வயதிட்கு உட்படட சிறுவர் சிறுமிகளுக்கு, ஒருவருக்கு 2 பால் மா பாக்கெட்டுகள், சீனி, பிஸ்கட்டுகள் அடங்கிய 70 பொதிகள் வழங்கி வைக்கப்பப்பட்டது. அச் சமயம் ரோட்டரி கழக உறுப்பினர்களான செயலாளர் பிரபாகரன், அடுத்த தலைவர் கிருட்ணதாஸ் Rotary Foundation Chairman ரகுராம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பாடசாலை அதிபர்கள், பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இதற்குரிய நிதி லண்டனில் வசிக்கும் திரு பாலா கனகசபை அவர்களாலும் கனடாவை சார்ந்த ஆனந்தன் தர்மா அவர்களாலும் வழங்கப் பட்டது.

# க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலை, சித்தாண்டி பிரதேசங்களில் உள்ள மாணவர்களிற்கு க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தமைக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் செங்கலடி கிளையில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அதிபர்களான மட்/கலு/வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலய அதிபர் ரி.முரளிதரன், மட்/கலு/வந்தாறுமுலை விஸ்ணு மகா வித்தியாலய அதிபர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கனடாவில் இருக்கும் இளையதம்பி ஏகாம்பரம் அவர்கள் தனது குடும்ப உறவுகள் மற்றும் நண்பர்கள் மூலம் இங்குள்ள வறிய நிலையில் உள்ள மாணவர்களை பொறுப்பெடுக்கும் திட்டம் ஊடாக புலம்பெயர்ந்துள்ள நல் உள்ளங்களால் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் மாதாந்தம் 2800 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த உதவித் தொகையினைப் பெற்று க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த 10 மாணவர்களுக்கு முதற்கட்டமாக தலா 10,000 ரூபாய் தொடக்கம் 25,000 ரூபாய் வரையிலான ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

# கன மழையால் கிண்ணியா விவசாயிகளின் சோகம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தற்போது பெய்து கொண்டிருக்கும் மழை காரணமாக கிண்ணியாவின் புளியடிக்குடா, பக்கிரான் வெட்டை, வன்னியனார் மடு வயல் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீதிகளும் வயல் நிலங்களும் அணைக்கட்டுகளும் சேதமடைந்து அழிந்து கொண்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 2000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் இதனால் பாதிப்படைந்து வீதிகளும் அணைகளும் ஒவ்வொரு முறையும் பாதிப்படைந்து கொண்டே இருக்கின்றன.

40 அடி அகலமும் 10 அடி ஆழமும் கொண்ட இந்த பிரதான வடிச்சல் ஆற்றினை குறுக்காக மரித்து கட்டுவதன் மூலமே வயல்களுக்கு நீரை பாய்ச்சுகின்றோம்.

அதிக மழை பொழிகின்ற போது குறுக்காக கட்டப்படும் மரிப்பை அகற்ற முடியாமையினால் இவ் ஆறு பெருக்கெடுத்து நீர் மட்டம் உயர்வடைவதனால் இவ்வாறான துன்பங்களுக்கு விவசாயிகள் முகம் கொடுக்கின்றார்கள்.

இந்த நவீன காலத்திலும் முறையான ரெகுலேற்றர் பொறிமுறை இன்றி இவ் விவசாயிகள் ஒவ்வொரு போகத்திலும் பல தடவைகளில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அதிகாரிகளிடத்திலும் அரசியல்வாதிகளிடத்திலும் ரெகுலேட்டர் பொறிமுறையை அமைத்துத் தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரை செய்து தரப்படவில்லை.

எனவே விவசாய அமைச்சர் ஜனாதிபதி ஆகியோர் இதில் கரிசனையை கொண்டு உடனடியாக ரெகுலேட்டர் பொறிமுறையை அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

# காரைதீவு கடலோரத்தில் 25 ஆயிரம் பனை விதைகள் நடும் திட்டம்





(வி.ரி.சகாதேவராஜா)

ஆழிப்பேரலையின்போது காரைதீவுக் கடலோரத்தில் அழிவடைந்த பனைமரங்களுக்குப் பதிலாக 25ஆயிரம் பனைவிதைகளை நடும் வேலைத்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பனைஅபிவிருத்திச்சபை மற்றும் காரைதீவு பிரதேச செயலகத்தோடு இணைந்து காரைதீவு விளையாட்டுக்கழகம் இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அதன் அங்குரார்ப்பண வைபவம், காரைதீவு காளி கோவில் கடலோர முன்றலில் நேற்று சுகாதாரநெறிமுறைக்கிணங்க நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டுக்கழகத்தலைவர் கி.சசிகரபவானின் அழைப்பில் அங்கு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், பனைஅபிவிருத்திச்சபை மாவட்ட முகாமையாளர் ரி.விஜயன், தென்கிழக்குபல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எ.எம்.றியாஸ் ,காரைதீவு விளையாட்டுக்கழக போசகர் வி.ரி.சகாதேவராஜா ,பிரதி திட்டமிடல் உத்தியோகத்தர் எம்.மோகனகுமார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

கற்பகதருவான பனையின் பயன்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் அங்கு உரையாற்றியதையடுத்து, கடலோரத்தில் குழிகள் வெட்டப்பட்டு பனைவிதைகள் அதிதிகள் தொடக்கம் கலந்துகொண்ட அனைவராலும் நடப்பட்டன.

பிரதேசசெயலக கிராமசேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கழக உறுப்பினர்கள் என பலதரப்பினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். கழக செயலாளர் வெ.உதயகுமாரன் கலந்துகொண்ட அதிதிகள் மற்றும் ஏனையோருக்கு நன்றிசெலுத்தினார்.

# பிரச்சனையை மாத்திரம் வைத்து அரசியல் செய்பவர்களை தீனி போட்டு வளர்த்துவிடுகின்றன சில திணைக்களங்கள்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்!!



பிரச்சனையை மாத்திரம் வைத்து அரசியல் செய்பவர்களை தீனி போட்டு வளர்த்துவிடுகின்ற செயற்பாட்டினையே சில திணைக்களங்கள் மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்குறுதி மற்றும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக நாட்டை கட்டியெழுப்பும் சௌபாக்கியத்தின் நோக்கு 'உங்களுக்கு நாடு நாட்டுக்கு நாளை' எனும் உயரிய சிந்தனைக்கு அமைவாக, பல நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் ஊடாக நாடு பூராகவுமுள்ள க.பொ.த சாதாரண தரத்திற்கு குறைவான கல்வியினை கற்றுள்ள மற்றும் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைய தவறியுள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஒரு இலட்சம் வேலை வாய்ப்பினை வழங்கி நாட்டை சுபீட்சத்தின்பால் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு அமைவாக நியமனக்கடிதங்களை கட்டம் கட்டமாக வழங்கிவைக்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு அமைவாக இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய சதாசிவம் வியாழேந்திரனது சிபாரிசிற்கமைவாக இரண்டாம் கட்டமாக 78 பேரிற்கான நியமனக்கடிதங்கள் சனிக்கிழமை இராஜாங்க அமைச்சரினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்ற நியமனக் கடிதங்களை வழங்கிவைக்கும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டு நியமனங்களை வழங்கிவைத்திருந்ததுடன், குறித்த நிகழ்விற்கு விசேட அதிதிகளாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு நியமனக்கடிதங்களை வழங்கிவைத்துள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள், முற்போக்குத் தமிழர் கட்சியின் பிரதான இணைப்பாளர்கள் மற்றும் கட்சியின் கள இணைப்பாளர்கள், நியமனதாரிகளின் உறவினர்கலென பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சிபாரிசிற்கு அமைவாக 199 இளைஞர் யுவதிகளுக்கான நியமனக்கடிதங்கள்

முதற்கட்ட நியமனத்தின் போது

வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் இதன்போது மேலும் உரையாற்றுகையில்,

இந்த மாவட்டத்திலே நிறைய பிரச்சனைகள் இருக்கின்றது, பிரச்சனைகள்தான் தேவை, தேவைகள்தான் பிரச்சனைகள். இந்த பிரச்சனைகளுக்காக இரண்டு விதமான அரசியல் தலைமைத்துவங்கள் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றார்கள். அதில் ஒன்று பிரச்சனையை மாத்திரம் வைத்து அரசியல் செய்பவர்கள் இன்னொன்று பிரச்சனை இருப்பதை அறிந்து அந்த பிரச்சனைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முனைபவர்கள் இந்த இரண்டு விதமான அரசியல் தலைமைத்துவங்களை நாங்கள் இந்த மாவட்டத்திலும் இந்த நாட்டிலும் பார்க்கின்றோம்.

அது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்கட்சியாக இருந்தாலும் சரி இரண்டுவிதமான பிரிவினர் இருக்கின்றார்கள். ஒன்று தனிய பிரச்சனையை மாத்திரம் வைத்து அரசியல் நடத்துபவர்கள். இன்னொரு பிரிவினர் பிரச்சனையை அறிந்து அதற்கான தீர்வை வழங்க வேண்டும் என்று நினைப்பவர்கள்.

இலங்கையிலே சில திணைக்களங்கள் இருக்கின்றன பிரச்சனையை வைத்து அரசியல் செய்கின்ற அரசியல் தலைமைத்துவங்களுக்கு தீன் போடுகின்ற திணைக்களங்கள். ஒன்று தொல் பொருள் திணைக்களம், இன்னொன்று வன இலாகா மற்றயது வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் மகாவலி இப்படியான திணைக்களங்கள் பிரச்சனையை மாத்திரம் வைத்து அரசியல் செய்பவர்களை வளர்த்துவிடுகின்ற திணைக்களங்களாகத்தான் இந்த இலங்கையிலேயே இருக்கின்றது.

வன இலாகா திணைக்களத்தின் பிரச்சனை மட்டக்களப்பிற்கு மாத்திரம் இல்லை. இலங்கையில் சுமார் 19 மேற்பட்ட மாவட்டங்களில் இந்த பிரச்சனை இருக்கின்றது. வனஜீவராசிகள் திணைக்கள பிரச்சனையும் 19 மேற்பட்ட மாவட்டங்களில் இருக்கின்றது. வனஜீவராசிகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற இராஜாங்க அமைச்சர் அம்பாரையில் இருக்கின்றார் அவர் கூறுகின்றார் அவருக்கும் அவருடைய திணைக்களங்களின் அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு வருகின்றது என்று ஆனால் அவர் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கின்றார். ஆனால் அந்த திணைக்களம் சட்டத்தின் பிரகாரம் தன்னுடைய வேலைகளை ஆரம்பிக்க நினைக்கின்றது. ஆகவே பிரச்சனையை மாத்திரம் வைத்தி அரசியல் செய்பவர்களுக்கு தடி எடுத்து கொடுப்பவர்கள் போன்றுதான் நிலைப்பாடுகள் காணப்படுகின்றது.

ஆனால் இந்த திணைக்களங்களுக்கான சட்டங்கள் அனைத்தும் அவ்வாறே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. வன இலாகாவை எடுத்துக்கொண்டால் அவர்கள் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் போன்ற இந்த கட்டமைப்பிற்குள் அவர்கள் வேலை செய்யமாட்டார்கள் நேரடியாக கொழும்பில் இருந்தே வேலை செய்கிறார்கள்.

இந்த திணைக்களங்கள் எல்லாம் நேரடியாக கொழும்பில் இருந்து வேலை செய்வதனால் இங்கு மக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் வருகின்றது. அந்த முரண்பாடுகளை வைத்து சிலர் அரசியல் செய்கின்றார்கள். இந்த இடத்தில்தான் நாங்கள் அதை எப்படி தீர்த்துக் கொடுக்கலாம் என சிந்திக்க வேண்டும்.

ஆகவே எமது மட்டக்களப்பு மாவட்டத்திலே இப்பொழுது இருக்கின்ற ஒரு பாரிய பிரச்சனை இந்த வனஜீவராசிகளின் பிரச்சனை. அதிலும் குறிப்பாக யானை பிரச்சனை உங்களுக்கு தெரியும் இப்பொழுது யானைகள் நகரை கூட நெருங்கிவிட்டது. இலங்கையில் சுமார் %500 இற்கு மேற்பட்ட யானைகள் இருப்பதாக கூறப்படுகின்றது. எமது மாவட்டத்தில் கடந்த 2020 நடுப்பகுதியிலே கிட்டத்தட்ட 415 யானைகள் உள்நுழைந்திருக்கின்றன.

எமது மாவட்டத்திற்கு 15 இடங்களால் யானைகள் உள்ளே வருகின்றது. செங்கலடி நகர் பகுதியில் 50 மீற்றர் தூரத்தில் யானை வந்து நிற்கின்றது. சிலர் அதை வீடியோ எடுத்து டிக்டொக் போடுகின்றார்கள் ஆனால் அந்த பகுதி மக்கள் உயிரை கையில் பிடித்துக்கொண்டு அச்சத்தில் வாழ்கின்றார்கள். கடந்து ஓரிரு வாரங்களிலே அந்த பகுதிகளில் கிட்டத்தட்ட நான்கு பேர் யானைகளால் அடித்து கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறுதான் மிருகங்களுக்கும் மனிதர்களுக்குமிடையில் போராட்டங்கள் ஆரம்பித்திருக்கின்றது. இதெல்லாம் பிரச்சனைகள். இந்த பிரச்சனைகளை வைத்தே ஒரு கூட்டம் அரசியல் செய்கின்றது.

இந்த விடையங்கள் இந்த அரசாங்கத்தில் வந்த பிரச்சனைகள் அல்ல. இவை தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. தொல்பொருள் பிரச்சனையும் இந்த அரசாங்கத்தில் வந்த பிரச்சனைகள் அல்ல. அது கடந்த காலம் தொடக்கம் இருந்து வருகின்றது. குறிப்பாக எங்களுடைய தமிழ் தலைமைகள் நல்லாட்சிக்கு முட்டுக் குடுத்துக்கொண்டு வந்த காலகட்டத்திலே மட்டக்களப்பிலே 600 இடங்கள் தொல்பொருளிற்காக அடையாளப்படுத்தப்பட்டன. அப்போது இவர்கள் யாரும் வீதிக்கு இறங்கி போராடல்லை. காரணம் இவர்கள் நல்லாட்சிக்கு முட்டுக்கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். வரவு செலவுத்திட்டம் உள்ளிட்ட அனைத்திற்கும் நல்லாட்சியை பாதுகாத்துக் கொண்டு இருந்ததாலும் அந்த அரசோடு ஒரு ஒப்பந்தத்தில் இருந்ததால் இவர்களால் எதிர்க்க முடியவில்லை.

இங்கு பிரச்சனைகளுக்கான தீர்வும் இல்லை அபிவிருத்தியும் இல்லை இவ்வாறாக ஒன்றுமே இல்லாம சும்மா பேசிக்கொண்டு இருப்பவர்களுக்கு எமது வாக்குகளை அளிப்பதனால் எமது சமூகம்தான் பின்னடைவை சந்திக்கும். அதே வேளை 10% கிலோ மீற்றருக்கு யானை வேலி அமைப்பதற்கான அனுமதி எமது மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. யானை வேலிகள் மிக விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு %000 வெடிகளை கோரியிருக்கின்றோம். ஆளணி வளம் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த பணிக்காகவே உங்களை நியமித்துள்ளோம். இது ஒரு அரச வேலை வாய்ப்பு என்பதற்கு அப்பால் மக்களுக்கு சேவை செய்ய கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பாக கருதி தங்களது கடமைகளை நீங்கள் ஆற்றவேண்டும் என்றார்.

# தமிழரின் தாயகக் கோட்பாடு மிக ஆபத்தான நிலையில் தடுப்பதற்கான பொறிமுறை செயற்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

(வாஸ் கூஞ்ஞ)

சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழரின் தாயகக் கோட்பாட்டை உடைத்து இன விகிதாசாரத்தை மாற்றி அமைப்பதில் மிகவும் மூர்க்கத்தனமாக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் அதற்கான வியூகங்களை ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான குழு தீவிரப்படுத்தியுள்ளது. ஆகவே உடனடியாக ஒன்றிணைந்து தடுப்பதற்கான பொறிமுறை ஒன்றை செயற்படுத்த வேண்டும் இதன் மூலமே இருப்பை தக்க வைக்க முடியும் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர இலங்கைக்கு பின்னர் வந்த பிரதமர் டி எஸ் சேனநாயக்க தொடக்கம் ஜனாதிபதி கோட்டாபய வரை விரிவடைந்து பெரும் பூதமாக மாறி விட்டது தமிழரின் வடக்கு கிழக்கு மாகாண நிலங்களை பறித்து சிங்கள குடியேற்றங்களை உருவாக்கும் திட்டம்.

ஆரம்பங்களில் கல்லோயாத் திட்டம் அல்லை கந்தளாய் திட்டம் என பெயர் சூட்டி அரங்கேறிய சிங்கள குடியேற்றங்கள் இன்று சத்தம் இன்றி மிகத் தீவிரமாக ஊடுருவி விட்டது. போரின் போது தீவிரப் படுத்த முடியாது போன குடியேற்றங்கள் யுத்த மௌனத்தின் பின்னர் தீவிரமடைந்துள்ளது.

தற்போதைய நில அபகரிப்பு தொல்லியல் இ வனவள இ கரையோரப் பாதுகாப்புத் திணைக்களங்கள் மூலமாகவும் எல்லை நிர்ணயம் என்ற போர்வையிலும் முன்னெடுக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை திருகோணமலை மாவட்டங்கள் எப்படி இன விகிதாசார முறையில் மாற்றியமைக்கப்பட்டதோ அதனை ஒத்த நிலைக்கு



மட்டக்களப்பு முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நில அபகரிப்புக்களும் சிங்கள குடியேற்றங்களும் தற்போது தீவிரமடைந்துள்ளது.

வடக்கு கிழக்கு நிலத் தொடர்ச்சியின் எல்லையில் குறிப்பாக திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் உள்ள நிலப்பரப்பை சிங்கள குடியேற்றங்களுக்கு உள்ளாக்கி தமிழர் தாயகத்தின் நிலத் தொடர்பின் நிர்வாக கட்டமைப்பை உடைத்துள்ளனர் இவ்வாறு தொடரும் நில அபகரிப்பு தற்போது வவுனியா மாவட்ட இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க அனுராதபுரம் வடக்கு எல்லைக் கிராமங்களை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் எல்லை நிர்ணயத்தை மாற்றி இணைக்கும் செயற்பாடு வரை அரங்கேறி உள்ளது. தமிழர் தரப்பு தொடர்ந்து வீதியில் போராடுவதும் கடிதங்களை எழுதுவதும் இதனை முடிவுக்கு கொண்டு வரும் என நினைத்தால் இன்னும் சிறிது காலத்தில் தாயகக் கோட்பாடு முழுவதும் பறிக்கப்பட்டு விடும் உடனடியாக ஒன்றிணைந்து தடுப்பதற்கான பொறிமுறை ஒன்றை செயற்படுத்த வேண்டும் இதன் மூலமே இருப்பை தக்க வைக்க முடியும் என இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஓட்டமாவடி காவத்தமுனை விசேட தேவையுடையோர் பாடசாலை ஆரம்பம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை விசேட தேவையுடையோர் பாடசாலை கல்வி நடவடிக்கைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவரும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான எம்.பீ.எம்.சித்தீக் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறித்த பாடசாலை மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாணவர்களின் நலன்கருதி பாடசாலை சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

எனவே, பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு தொடர்ந்தும் அனுப்பிவைக்கு முடியும் என்று தலைவர் எம்.பீ.எம்.சித்தீக் வேண்டிக் கொண்டுள்ளார்.

# க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட கோடுப்பனவு வழங்கும் நிகழ்வு

(ரக்ஸனா)





மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலை, சித்தாண்டி பிரதேசங்களில் உள்ள மாணவர்களிற்கு க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தமைக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (30) விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் செங்கலடி கிளையில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அதிபர்களான மட்/கககு/வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலய அதிபர் ரி.முரளிதரன், மட்/ககு/வந்தாறுமுலை விஸ்ணு மகா வித்தியாலய அதிபர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கனடாவில் இருக்கும் இளையதம்பி ஏகாம்பரம் அவர்கள் தனது குடும்ப உறவுகள் மற்றும் நண்பர்கள் மூலம் இங்குள்ள வறிய நிலையில் உள்ள மாணவர்களை பொறுப்பெடுக்கும் திட்டம் ஊடாக புலம்பெயர்ந்துள்ள நல் உள்ளங்களால் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் மாதாந்தம் 2800 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த உதவித் தொகையினைப் பெற்று க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த 10 மாணவர்களுக்கு முதற்கட்டமாக தலா 10,000 ரூபாய் தொடக்கம் 25,000 ரூபாய் வரையிலான ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.


# அன்பான வாசகர்களுக்கு



இம்மாதம் தொடக்கம் சுபீட்சம் நிகழ்நிலைப்பத்திரிக்கை சிலவாரங்களுக்கு வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாத்திரமே வெளிவரும். உடனடிச்செய்திகளுக்கு www.supeedsam.com எனும் எமது செய்தித்தளத்துடன் இணைந்திருங்கள்

# சௌமியமூர்த்தி தொண்டமானின் 22 வது சிரார்த்த தினம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகரும் ,ந்திய வம்சாவளி மக்களின் தலைவருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 22 வது சிரார்த்த தினம் சனிக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது பழைய பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மலர் மாலை அணிவிப்பதையும் ,இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மலர் கொத்து வைப்பதையும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவ சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம். கொழும்பு சௌமிய பவனில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரின் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

# சாய்ந்தமருதில் நல்லிணக்க மன்றங்களுக்கான வலுவூட்டல் திறன் விருத்தி பயிற்சி

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



தேசிய சமாதானமும் சமூகப்பணிக்குமான நிறுவனத்தின் அனுசரனையுடன் அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் பிரதேச நல்லிணக்க மன்றங்களுக்கான வலுவூட்டல் திறன் விருத்தி பயிற்சிகளை பி.சி.ஏ நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக சாய்ந்தமருது பிரதேச நல்லிணக்க மன்றத்திற்கான பயிற்சி நெறி நேற்று சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயத்தில் பி.சி.ஏ. அமைப்பின் சாய்ந்தமருது இணைப்பாளர் ஏ.ஆதம்பாவா அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வளவாளர்களாக அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின் இணைப்பாளர் ஐ.எல்.இர்பான், அம்பாரை மாவட்ட நல்லிணக்க மன்ற இணைப்பாளர் எஸ்.எல்.ஏ.அஸீஸ், பி.சி.ஏ. அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளான எம்.எல்.ஏ. மாஜித், எம்.எஸ். ஜெலீல் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கடந்த வருடத்தில் சாய்ந்தமருது பிரதேச நல்லிணக்க மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட அடைவுகள், எதிர்கொண்ட சவால்கள், எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்த வழிமுறைகள் மற்றும் நல்லிணக்க மன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் குறித்தும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வன்னேரிக்குளம் இறால் உற்பத்தியில் வீழ்ச்சி நன்னீர் மீன்பிடி சங்கத்தின போருளாளர் சுட்டிக்காட்டு

(வாஸ் கூஞ்ஞ)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் இறால் வளர்ப்புக்கு ஏற்ற இடமாக இல்லாதிருப்பதால் இதற்கு பதிலாக மீன் குஞ்சுகளை வளர்ப்புக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது நலம் எனவும் இறால் வளர்ப்பில் ஏற்படும் பாதிப்பை கண்டறியப்பட வேண்டும் எனவும் வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடி சங்கத்தின் பொருளாளர் மெசிடோ நிறுவன இணைப்பாளரிடமும் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நீர் உயிரியல் வள அதிகாராசபையினால் (நெக்டா) இனம் காணப்பட்ட வன்னேரிக்குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காகவும் நன்நீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்காகவும் வன்னேரிக்குளத்தில் இறால் குஞ்சுகள் விடுவதற்காக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் யட்சன் பிகிராடோ மற்றும் கிளிநொச்சி மேலதிக அரசஅதிபரும் இவ் குளத்தில் இறால் குஞ்சுகளை விடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

அப்பொழுது வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடி சங்கத்தின் பொருளாளர் இது தொடர்பாக சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின்



இணைப்பாளர் யட்சன் பிகிராடோ மற்றும் கிளிநொச்சி மேலதிக அரச அதிபரிடம் கருத்து தெரிவிக்கையில்

இவ் குளமானது சேற்றுப் பாசி நிறைந்து காணப்படுவதால் இதில் மீன் குஞ்சுகள் வளரும் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. அத்துடன் இதற்குள் இறால் வளர்ச்சி குன்றிய நிலையிலேயே காணப்படுக்கின்றது.

இறால் குஞ்சுகளை குளத்தில் விடுவதால் மீன் உற்பத்தி குறைகிறது அத்தோடு இறாலின் மீது ஒருவிதமான பாசிகள் படர்ந்து தரமற்று காணப்படுவதால் எவரும் கொள்வனவு செய்ய முன்வருகிறார்கள் இல்லை எனவும்

இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணும் வரை வன்னேரிகுளத்தில் இறால் குஞ்சுகளை விட வேண்டாமென்று வன்னேரிக்குளம் மீன்பிடி சங்கத்தின் பொருளாளர் இவ்வாறு அவர்களிடம் தெரிவித்தார;.

அத்துடன் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது

வன்னேரிக்குளம் நன்னீர் மீன் பிடி தொழிலை நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் இந்த குளத்தில் இரண்டு தடவை இறால் குஞ்சுகள் விடுபட்டது முதல் முறை நல்ல நிலையில் இருந்தது இரண்டாவது முறை இறால்களால் மீன் அழிவுகள் ஏற்பட்டு மீன் விளைச்சல் குறைந்துவிட்டது

எம்மிடம் இறால் எடுப்பதற்காக வரும் வியாபாரிகள் எமது குளத்தில் உற்பத்தியாகும் இறால்கள்மீது ஒருவிதமான பாசி படர்ந்து தரம் இல்லாமல் இருப்பதாகக் கூறி 1200 ரூபாய்க்கு கொள்வனவு செய்த இறால் விலையை 400 ரூபாயாக குறைத்து விட்டார்கள்

முறிப்புக் குளம் மற்றும் அக்கராயன் குளத்தில் உற்பத்தியாகும் இறால்களை எம்மிடம் கொண்டு வந்து காண்பித்தார்கள் உண்மையில் இறால்கள் மீது பாசி படர்ந்து காணப்படுகிறது.

இதனால் எமது குளத்தில் மீன் உற்பத்தி பாரிய அளவு வீழ்ச்சி அடைந்து எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இறாலின்மீது இவ்வாறு பாசிகள் படுகிறது என்பது தெரியவில்லை இந்த பிரச்சினைகள் தீரும் வரை எமது வன்னியர் இக்குளத்தில் இறால் குஞ்சுகள் விடுவதில்லை என்று எமது மீனவ சங்க கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அதனை தேசிய நீர் உயிரின வள அதிகார சபைக்கு (நெக்டா) அனுப்பி இருந்தோம்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு இந்த குளத்தில் சிலாப்பியா ரோகட்லா போன்ற மீன் குஞ்சுகளை விடுவது பொருத்தமாக இருக்கும் என்று வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடி சங்கத்தின் பொருளாளர் தெரிவித்தார்.




# அச்சங்குளம் கிராமத்தில் குடிநீர் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

(வாஸ் கூஞ்ஞ)





ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் சிந்தனையில் உதித்த சௌபாக்கியத்திற்கான இலக்கு எனும் கொள்கை பிரகடனத்துக்கு அமைய 'அனைவருக்கும் சுத்தமான குடிநீர்' எனும் கருப்பொருளின் கீழ் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுடன் இணைந்து தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 'பிரஜா ஜல அபிமானி' குடிநீர் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ. சனத் நிஷாந்த பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்

மேலும் இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி. ஸ்ரென்லி டிமெல் நானாட்டான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் . மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த ராஜா இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நானாட்டான் பிரதேசசபை உப தவிசாளர் அச்சங்குளம் ஆலயத்தின் பங்குத்தந்தை உள்ளிட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

